Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 169/2020 Date: 06.03.2023
Deposition of witness for prosecution: PW4(LW2)
Defence:
Court:

| Name | ரிஜீ | Caste | |
|---|---|---|---|
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 06.03.2023 TIME **4.31** பிஎம்

**(2,4 எதிரி**கள் **ஆஜர், 1 வது எதிரி சிறையில் உள்ளார். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 317 குவிமுச அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சேத்துகுழியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா1 எனது நண்பர் ஆவார். கடந்த 06.06.2019 ம் தேதி காலை 5 மணியளவில் சேத்துகுடியில்யிலிருந்து கம்பத்திற்கு அ.சா1 னின் வண்டியில் நானும், அ.சா1 ஜெயனும், வரும் போது கம்பம் அடிவாரத்தில் 4-5 நபர்கள் வண்டியை மறித்தார்கள். எங்களை அடித்து ஜெயன் செல்லை பறித்துவிட்டார்கள். என்னுடைய பணம் ரூ. 8000/-த்தையும் பறித்துவிட்டார்கள். அதன் பிறகு நானும், ஜெயனும் கம்பம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். பின்னர் எனக்கும், ஜெயனுக்கும் ஏற்பட்ட சிறு சிறு காயங்களுக்கு சிகிச்சை பெற கம்பம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு சென்றுவிட்மோம். எங்களை யார் வழிமறித்து அடித்து செல், பணத்தை பிடுங்கிய நபர்களை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிகள் 2,4 மற்றும் சிறையிலிருந்த விடியோ மூலமாக ஆஜர்படுத்தப்பட்ட 1 வது எதிரி ஆகியோர் அவர்கள் இல்லை. (3 வது எதிரி ஆஜர் இல்லாததால், முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2023.03.06 18:46:12 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.